**02.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மீனம்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி தொடக்கம்**

மெட்ரோ இரயில் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. அதில் ஒரு அங்கமாக மீனம்பாக்கம் மெட்ரோ இரயில் நிலைய வாகன நிறுத்தும் இடத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) திரு.எல்.நரசிம் பிரசாத் இன்று (02.01.2020) தொடங்கிவைத்தார். இதன் மூலம் தரைதளத்தில் 5 இருசக்கர வாகனங்களும் தரையில் இருந்து 9 அடி உயரத்தில் 5 இருசக்கர வாகனங்களும் நிறுத்தலாம். இதனால் இடப்பற்றாக்குறையை தவிர்க்க முடியும். இந்த வசதியின் மூலம் 5 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 10 இருசக்கர வாகனங்களை நிறுத்தலாம்.

ஹைட்ராலிக் முறையில் இயக்கப்பட்டு இருசக்கர வாகனங்கள் மேலே கொண்டு செல்லப்படுகின்றன. புவிஈர்ப்பு விசையின் மூலம் வாகனங்கள் கீழே இறக்கப்படுகின்றன. இந்த வசதியை மேலும் பல மெட்ரோ இரயில் நிலைய வாகன நிறுத்துமிடங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஸ்விப்ட் பவர் புராடக்ட்ஸ் இன்ஜினியரிங் பிரைவேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.பிரபு உட்பட சென்னை மெட்ரோ இரயில் நிறுவன அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.